(4) முன்னாள் பேரவைத் தலைவர், முன்னாள் துணைப் பேரவைத் தலைவர் ஆகியோரைப் பற்றி விமர்சனம் செய்யலாமா என்று எழுப்பப்பட்ட பிரச்னையின் மீது பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, 10–4–1975 அன்று மாநில சட்டமன்ற மானியக் கோரிக்கை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய திரு. சீனிவாசன் அவர்கள்,

"பேரவைத் தலைவருக்கு எந்த விதமான உரிமையும் இல்லை ; முழுக்க முழுக்க லீடர் ஆப் தி அவுஸ் அவர்கள் செய்கிற முடிவு தான். அவருடைய முடிவுக்கு உட்பட்டுத்தான் பேரவையில் அலுவல்கள் நடைபெற வேண்டிய நிலைமை இருக்கிறது" என்றும்,

" முதல் அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதை அன்றைக்கு அங்கேயிருந்த சீனிவாசன் செய்தேன். அன்றைக்கு நீங்கள் சொன்ன கடமையைச் செய்தேன் ",

என்றும் கூறியதையொட்டி மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள்

" திரு. எட்மண்ட் அவர்கள் துணைத் தலைவராக இருந்தபோது தொலைபேசியில் ஒரு வருடத்திற்கு ரூ. 2,000 ஆகியிருக்கிறது. திரு. மதியழகன் அவர்கள், பேரவைத் தலைவராக இருந்தபோது ரூ. 12,000 ஆகியிருக்கிறது. ஆனால், திரு. சீனிவாசனுக்கு மட்டும் ரூ. 75 ஆயிரத்திலிருந்து ரூ. 80 ஆயிரம் ஆகியிருக்கிறது. இதைக் கேட்டோம் உங்களுக்குக் கோபம் வந்து போய்விட்டீர்கள் "

என்று கூறினார்கள்.

"இதையொட்டி, 16–4–1975 அன்று திரு. சீனிவாசன் அவர்கள் கீழ்க்கண்டவாறு ஓர் ஒழுங்குப் பிரச்னையை எழுப்பியுள்ளார்கள்:—

" திரு. பெ. சீனிவாசன் : ஏ வேலிட் பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இன்று நான் எழுப்ப விரும்பும் பாயின்ட் ஆப் ஆர்டர், சட்ட மன்ற விதிமுறைப்படி, நம்முடைய சம்பிரதாயங்களின்படி, சட்டப்பேரவைத் தலைவர் அல்லது துணைத் தலைவரைப்பற்றி அவர் பேரில் பதவி நீக்கத் தீர்மானம் வந்தாலொழிய அவரைப் பற்றியோ அல்லது அவருடைய நடவடிக்கையைப் பற்றியோ விமர்சனம் செய்யக்கூடாது என்ற முறையைப் பின்பற்றி வருகிறோம். இந்த முறை இப்போது பதவியில் இருக்கும் பேரவைத் தலைவர், துணைத் தலைவருக்கு மட்டுமா, அல்லது முன்னாலே பதவியில் இருந்தவர்களுக்கும் பொருந்துமா ?

இதற்கு முன்னாலே பதவியில் இருந்த தலைவர், துணைத் தலைவர் அவர்களுடைய பொறுப்புகள் பற்றியோ, நடவடிக்கைகள் பற்றியோ, அல்லது அவருடைய அலுவலக நிகழ்ச்சிகள் பற்றியோ,

இங்கே இந்தப் பேரவையில் ஒரு குற்றச் சாட்டாகவோ அல்லது வேறு வகையிலோ இந்தப் பேரவையில் விவாதிக்கலாமா அல்லது விவாதத்திற்கு ஆதாரமாக எடுத்துவைக்கலாமா என்ற ஒழுங்குப் பிரச்னையை இங்கே எழுப்ப விரும்புகிறேன்.''

எழுப்பப்பட்ட இந்தப் பிரச்னை பொதுவானதாக உள்ளது.

பேரவைத் தலைவர் பேரவைத் தலைவர் இருக்கையில் இருக்கும் போது அவருக்குப் பேசுவதற்கு வாய்ப்பு இல்லை. தம்மைப் பற்றிப் பேசுவதற்கு விடையளிக்க முடியாத நிலையிலே அங்கு ஒருவரை இருத்திவிட்டு, அவரைப்பற்றி பேசுவது முறையாகாது. ஆகவே, பேரவைத் தலைவர், பேரவைத் தலைவர் இருக்கையில் இருக்கும் போது அவரைப் பற்றிப் பேசுவது முறையாகாது. அதனால்தான் பேரவைத்தலைவரைப் பற்றி பேசவே கூடாது என்று வரையறுத்துக் கூறிவிடாது பதவி விலகல் தீர்மானம் கொடுத்தாலல்லாது பேசக் கூடாது என்று மட்டுமே கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து நாம் உணர வேண்டுவது, பிறர் தம்மைப்பற்றி பேசுவதற்கு விடையளிக்க வாய்ப்பு அளித்துவிட்டு பேசலாம் என்பதே.

பேரவைத் துணைத் தலைவருக்கு அவையில் பேசும் உரிமை இருப்பதால் பதவி விலகல் தீர்மானம் கொடுத்தாலல்லாது பேசக் கூடாது எனப் பேரவைத் தலைவருக்கு அளித்திருக்கும் பாதுகாப்பு பேரவைத் துணைத் தலைவருக்கு அளிக்கப்படவில்லை.

முன்னாள் பேரவைத் தலைவருக்கும், முன்னாள் பேரவைத் துணைத் தலைவருக்கும் விடையளிக்க முடியாத ஒரு கட்டுப்பாடு இல்லை. அவர்கள் எப்போது வேண்டுமாயினும், எங்கு வேண்டுமாயினும் விடையளிக்க உரிமை பெற்றவர். ஆகவே, அவர்களைப் பற்றிப் பேசவே கூடாது என்பது, உறுப்பினர் உரிமையைப் பறிப்பதாகும்.

(5) அரசினர் தீர்மானம் விதி 41-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, 41-வது விதியின் கீழ் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை எடுத்துக் கொள்ளக்கூடாது என்ற விதியைத் தளர்த்தும்படி கேட்டுக்கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.